# தமிழ் நிலம்

## உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கிழமை இதழ்

தொகுதி 2 | தி.பி. 2015 சுறவம்-22 (5-2-1984) விலை 0-65 காசு | இதழ் எண் : 32 | பகுதி 6-7


## ஓர் ஐம்பதாண்டுகளுக்கேனும் தமிழறிஞர்கள், பேராசிரியர்கள்-

# நம் மொழி, இனநல மீட்பு முயற்சிகளைப் பற்றியே நூல்கள் எழுத வேண்டும்!

## பாரதியாரைப்பற்றிஏராளமான நூல்கள்எழுதும்பார்ப்பனர்கள், பாரதிதாசனைப் பற்றி ஒரு நூலாவது எழுதாதது ஏன்?

## செல்வனாக இருப்பதால் மட்டுமே அறிவாளியாகி விட மாட்டான்! அப்படியே அரசியலாரையும், ஆரியத்தையும் சார்ந்து எழுதினால் மட்டுமே 'மகாகவி' ஆகிவிட மாட்டான்!

### பாரதியார் பற்றிய நூல் மதிப்புரையில் – பாவலரேறு கருத்துரை!

— (இம் மாதத் தென்மொழி (நவம் -திசம். 83; சு.20; ஓ 1-2) இதழில், 'பாரதியின் புலமை நலம்' என்னும் ஒரு நூலக்குத் தந்த மதிப்புரையில், பாவலரேறு பெருஞ்சித்திரனார் மேற்கண்ட கருத்துகளைத் தெரிவித்துள்ளார். அம் மதிப்புரையில் கூறப் பெற்ற பிற பொதுவான கருத்துகள் வருமாறு :)

பாரதியார் ஒரு தகு புலவர் என்பதில் எவருக்கும கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஆனால் 'அரசன் முத்தினால் அரம்பை' 'அரசன் வீட்டுக் கோழிமுட்டை அம்மிக் கல்லையும் உடைக்கும்' என்னும் பழமொழிகளுக்கு ஏற்ப தேசியம் பாடி, ஆரியப் பெருமைக்கு வீறு சேர்த்து, வடமொழி மேலாண்மையை வலியுறுத்தியதால், ஆரியப் பார்ப்பனராலும் அரசாலும் அளவிறந்து 'மகாகவி' என்றும் 'தேசியக்கவி' என்றும் புகழவும் விளம்பரப் படுத்தவும் படுகிறார். செல்வனாக இருப்பதால் மட்டும் எப்படி ஒருவன் அறிவாளியாகி விட மாட்டானோ அப்படி, அரசியலாரைச் சார்ந்து, ஆரியத்தைச் சார்ந்து எழுதிவிட்டால் மட்டும் 'மகாகவி'யாகிவிட மாட்டான். ஆனால் இந்த நாட்டில்தான் வேண்டாத 'மலை'யை 'மண்ணாங்கட்டி'யாகவும், வேண்டிய 'மண்ணாங்கட்டி'யை 'மலை'யாகவும், அறிவில் வருணாச்சிரமத்தையும் முதலாளியத்தையும் புகுத்தும் எக்கழுத்தம இருக்க முடியும். எனவே பாரதி நூற்றாண்டென்று. கொண்டாடவும், பாரதியைப் பற்றிப் பன்னூற்றுக் கணக்கில் நூல்கள் எழுதவும் செய்கிறோம். ஒரு 'குயில் பாட்டும்', ஒரு 'பாஞ்சாலி சபதமும்' ஒரு 'மகாகவி'யை உருவாக்குமானால், ஒரு 'குடும்ப விளக்கும்', ஒரு 'பாண்டியன் பரிசு'ம், ஓர் 'அழகின்சிரிப்பும்', ஒரு 'தமிழியக்கமும்', 'எத்தனை பெரிய மகாகவியை உருவாக்கியிருக்க வேண்டும், ஆரியத்துக்கும் திராவிடத்துக்கும் ஒரு பிராமணப் பிறவிக்கும் ஒரு சூத்திரப் பிறவிக்கும் இங்கு காட்டும் வேறுபாடு இதுதான். 'பார்ப்பான் மலமும் மணக்கும்' எனும் பிறவி வெறி, வருண ஆசிரமத் தீ நாற்றம் இங்குதான் வீசமுடியும். எனவே தான் பாரதியைப் பற்றி இத்தனை நூல்கள்! அவரை அளவுக்கு மீறி சேக்சுபியர் ஆக்கிக் காட்டுகிறார்கள். இதில் தமிழர்களும் சோர்ந்து கொள் கிறார்களே என்பது தான் நம் வருத்தம்!

ஒன்றால் மூடநம்பிக்கைக்கும் ஆரிய அடிமைத்தனத்திற்கும் துணைபோன 'கம்ப' சூத்திரனைப் பிடித்துக் கொள்கிறார்கள். அன்றால் ஆரியத்தையே பிடித்துக் கம்பனுக்கும் மேலாகக் காட்டி, வீடணப் பிரகலாதன்களாகி விடுகிறார்கள். எந்த வண்டியில் ஏறினால் 'தேசிய பாரதத்தை' வலம் வர முடியுமோ, அந்த வண்டியில் அடித்துப் பிடித்தேனும் ஏறி, பார்ப்பனக் கழிவறையிலேனும் கதவைத் திறந்து கொண்டு அமர்ந்து கொண்டால் சரி என்று, நம் 'தன்மானம்' காக்க வேண்டிய பேராசிரியர்களும் 'தனிமானம்' காத்துக் கொள்கிறார்கள்.

நம்முடைய கருத்து இது தான்: இன்னும் ஓர் அரை நூற்றாண்டுக்கேனும்' நம் திருக்குறளைப் பற்றியும், பாவேந்தரைப் பற்றியும், பாவாணரைப் பற்றியும், மறைமலையடிகளைப் பற்றியும், திரு. வி. க. வைப் பற்றியும், இன்னும் நம் மொழி, இன, நல மீட்பாளர்களைப் பற்றியும், அவர்களுடைய முயற்சிகளைப் பற்றியுமே நூல்கள் எழுதிப் பரப்ப வேண்டும்; மேடைகள் தோறும் முழங்க வேண்டும். பார்ப்பனர்கள் பக்கம் - அவர்களின் இலக்கியங்கள் எழுத்துகள், கதைகள், காமக் கழிசடைகள் பக்கம் திரும்பவும் கூடாது. போதும் நாம் அடிமைப்பட்டது. எத்தனை வருக்கத்து கத்தினாலும், அவர்கள் நம் பக்கம திரும்புகிறார்களா? அவ்வளவு கட்டுப்பாடு; இறுகல் தன்மை. நாம் மட்டும் எத்துணைக் காலத்திற்கு இளித்த வாயர்களாகப் போவது. நாம் பாரதியார்களைப் பற்றி நூல் எழுதுகிற அளவுக்கு— வேண்டாம், எங்கேனும் ஒரு நூல் பாரதிதாசனைப் பற்றி, அவன்களுள் ஒருவன் நூல் எழுதியிருக்கின்றானா? எவரேனும் சொல்ல முடியுமா? ஏன இந்த இளித்த வாய்த்தனம்? ஏமாளித்தனம்? அதனால்தான் சொல்கிறோம், நம் இனம் முன்னேற வேண்டுமானால், இல்லை கால வெள்ளத்துள் மூழ்கிப் போகாமல் இருக்க வேண்டுமானால், குதிரைக்குக் கண்ணடக்கம் போடுவதைப்போல், ஓர் ஐம்பது ஆண்டுகளுக்காவது போட்டுக் கொண்டு, அவர்கள் இலக்கியங்கள் வரலாறுகள், வாலாட்டங்கள், வயிறுட்டங்கள், முதலிய எந்த இழவானாலும் சரி என்று, திரும்பிப் பார்க்காமல், நம் தமிழ் மொழிக்கும், இனத்துக்கும், நாட்டுக்கும் உகந்த தன்மைகளை, அவை உதவாக்கரைகளாக இருந்தாலும சரி, உலக அரங்கிற்குக் கொண்டு வந்து நிறுத்தியாக வேண்டும் என்பதை இந்த நூலைப் பற்றிய மதிப்புரையில் முன்னுரையாகக் கூறிக் கொள்ள விரும்புகிறோம்! நம் புலவர்களும் பேராசிரியர்களும் இதை நூறு முறை படித்து நெஞ்சாங்குலையில் போட்டு நிலையாக வைத்துக் கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

o

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உணர்வியக்கம், உ. த. மு. க.

தொடர்-6

# ஐந்து நாடுகளில் முப்பது நாள்கள்!

## என் முதல் ஐரோப்பியச் சுற்றுச் செலவு

மறுநாள் (13-9-83) முற்பகல் சிலருக்கு மடல்கள் எழுதினேன். பகல் உணவுக்குப் பின் சிறிதுநேரம் ஓய்வு எடுத்துக் கொண்டு, அரிமாவுடன் பகல் 3-30 மணியளவில் பாரீசு நகரைச் சுற்றிப் பார்க்க விரும்பினேன். அங்கு முழுநாளும் குளிர் இருந்துகொண்டே இருக்கும். குளிர் என்றால் நம்நாட்டுக் குளிர்போல் இல்லை, நீலமலையில் குளிர்காலத்தில் எப்படிக் குளிருமோ அப்படி அங்கு நான் சென்றிருந்த செப்டம்பர் மாதத்திலேயே இருந்தது. ஐரோப்பிய நிலைப்படி அது இலையுதிர்காலம். நாம் பருவ இணைப்பில் கூறினால் கூதிர்ப்பருவம். ஆகசுட்டு மாதத்துடன் கோடை கழிந்திருந்தது. எனவே எப்பொழுதும் காற்று வீசிக் கொண்டே இருக்கும். இரவில் வெளியில் தலைகாட்டவே இயலாது. இடையிடையே சிறு தூறலும் இருக்கும். இந்த நிலை நவம்பர் மாதம்வரை படிப்படியாய் மிகுந்து, திசம்பர், சனவரி, பிப்ரவரி ஆகிய மாதங்களில் பனி வெள்ளை வெள்ளையாய்த் திட்டுத் திட்டாய்க் கொட்டும் என்று கூறினார்கள். அந்தக் குளிரை நம்மால் தாங்கவே முடியாது என்றும் சொன்னார்கள். ஆனால் நான் சென்றிருந்த மாதம் இலையுதிர் காலத்தின் தொடக்கப் பகுதி. ஆனாலும் குளிர் கடுமையாகவே இருந்தது. இருப்பினும் என்னால் குப்பாயம் எல்லாம் போடாமல் ஓரளவு தாங்க முடிந்தது. ஆனால் குளிரொட்டி (Woollen Sweater) போட்டு, அதன்மேல் எப்பொழுதும்போல், முழுக்கைச் சட்டை போட்டுக்கொண்டு தான் ஐந்து நாடுகளிலும் சுற்றி வந்தேன்.

நாங்கள் வெளியே புறப்பட்டவுடன், வளங்கோவும் அவர் துணைவியாரும், கால்வரையுள்ள நீளக் குப்பாயம் (Long Coat) ஒன்றை எடுத்துக் கொடுத்து, அதைக் கட்டாயம் அணிந்து போகவேண்டும் என்றும், அதேபோல் காலுக்குக் காலுறை (Socks) அணிந்து, மூடுகள் (Boots) போட்டுக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார்கள். நான் முழுக்க முழுக்க 8 முழ வெள்ளை வேட்டியும், வெள்ளை முழுக்கைச் சட்டையும் ஒரு துண்டுமே அணிந்து பழக்கப்பட்டவன். என் கல்லூரி நாட்களில் நான்கைந்து முழுக்கால் சட்டைகள் வைத்திருந்தேன். ஆனால் 1950க்குப்பின் அவற்றை அறவே தவிர்த்து விட்டேன். பள்ளி, கல்லூரி வாழ்க்கையிலும் பெரும்பாலும் வேட்டி சட்டைதாம். அதற்காக என் தந்தையார் சிலவேளை கடிந்தும் உள்ளார். 'இப்பொழுதே எதற்கு வேட்டி? படிக்கின்றபொழுது கால்சட்டைதாமே எளிது. அதுவும் மாணவர்கள் முழுக்கால் சட்டைகளுடன் இருப்பது எவ்வளவு நன்றாக இருக்கிறது' என்று அவர் ஆசையைப் பலமுறை என்னிடம் கூறியும் நான் வேட்டியே விரும்பி அணிந்து வந்தவன். அதிலும் வெள்ளை உடைதான்! வண்ண உடைகளையும் 1950க்குப் பின் தவிர்த்துவிட்டேன்.

இந்த நிலைகள் தம்பி வளங்கோவுக்கு ஓரளவு தெரியும் என்றாலும், நாட்டையும் குளிரையும் நினைத்து ஒருவேளை நான் குப்பாயம் அணிய விரும்புவேனோ என்று கருதியிருக்கலாம். அதனால் அவரும் வலியுறுத்தினார். 'இல்லை தம்பி, அது தேவை இல்லை' என்று நான் மறுத்துவிட்டேன்: ஆனாலும் அவர் ஒரு நீளக்குப்பாயத்தைத் தந்து, 'குளிர் மிகவும் அதிகமாக இருக்கும்: இதை இன்று அணிந்து பாருங்கள். தேவையில்லையென்றால் பிறகு தவிர்த்துவிடலாம்' என்றார். நானும் அவர்கள் விருப்பத்திற்கும் ஐரோப்பா வந்த ஓர் அடையாளத்திற்கும் அதை அணிந்து நிலைக்கண்ணாடியில் பார்த்தேன். மிகவும் எடுப்பாக இருந்தது. பின் அந்த உடையுடனேயே வெளியில் புறப்பட்டோம்.

இந்த இடத்தில் இன்னொரு செய்தியையும் கூறவேண்டும். பொதுவாகவே ஐரோப்பா சென்ற, செல்கின்ற அனைவருமே ஐரோப்பிய உடைகளிலேயே காட்சியளிக்கின்றனர். இதுவரை சென்று வந்த தமிழ்த்தலைவர்களும் அறிஞர்களும் கூட நமக்குத் தெரிந்தவரையில், அங்குப் போனபின் அந்நாட்டு உடையில்தான் உலாவந்திருக்கின்றனர். வேட்டி சட்டையுடன் எவரும் அங்குச் சென்று வந்ததாகத் தெரியவில்லை. தலைவர் காமராசர்தாம் உருசியா சென்று வேட்டியையே பயன்படுத்தி வந்ததாக நமக்குத் தெரிகிறது. நாம் தெரியாத வகையில் அப்படி எவரேனும் சென்று வந்திருந்தால், அதற்காக நாம் பெருமைப்படலாம். ஏனெனில், ஐரோப்பியர்கள் நம் வெப்பநாட்டுக்கு வரும்பொழுதும் அவர்களின் (குளிர்) நாட்டு உடையில்தான் வருகின்றனர். நாம் மட்டும் ஏன் நம் நாட்டு உடையிலேயே சென்று நம் தனித்தன்மையை நிலைநாட்டுதல் கூடாது என்பது என் எண்ணம். இதனால்தான் நான் சிங்கை, மலேசியா சென்றபொழுதும் வேட்டி சட்டையுடன்தான் இருந்தேன். இதை ஒரு பெருமையாக நினைத்துக் கூறவில்லை. நாம் நாட்டின் பண்பாட்டின் தனித்தன்மையை ஏன் நாம் இதில் கடைப்பிடிக்கக் கூடாது? இந்த வகையில் காந்தியடிகளின் தேசிய உணர்வை நான் பெரிதும் மதிக்கின்றேன்: அத்தகையவர்களே தேசியம் பேசுவதில் முழுத் தகுதி படைத்தவர்களாக நாம் கருதமுடியும். இந்திராகாந்தியையும் நாம் இந்த வகையில் கருதிப் பாராட்ட முடியும். எனவே என் இயல்பான உடையிலேயே அங்கும் இருக்க விரும்பினேன். ஆனாலும், ஓர் அடையாளமாக—ஒரு சில மணிநேரம் தம்பி வளங்கோவின் விருப்பத்திற்காக—அந்தக் குப்பாயத்தை அணிந்து, அத்தோற்றத்தில் ஒரு படமும் எடுத்துக் கொண்டேன்.

இனி, செய்திக்கு வருவோம். அன்றைய பிற்பகல் 3-30 மணிக்குப் பாரீசைச் சுற்றிப் பார்க்கச் சென்றவர்கள் இரவு 10-30 மணிக்குத்தான் வீடு திரும்பினோம். பாரீசு நகரம் வளங்கோ குடும்பம் இருந்த போந்தொயிசு பகுதியிலிருந்து ஏறத்தாழ 40 கற்கள் தொலைவில் இருக்கிறது மின்வண்டியில் போவதற்கு அரைமணி நேரத்திற்குக் கொஞ்சம் கூடுதலாகவே ஆகும்: இவ்விடத்தில் அங்குள்ள அனைத்துச் சிறப்பியல்களையும் பற்றிக் கொஞ்சம் சொல்லியே ஆகவேண்டும். முழுவதும் சொல்வதென்றால் ஒரு நூலே எழுதியாகல் வேண்டும். அது காசு சம்பாதிக்க விரும்புபவர்கள் செய்யவேண்டிய வேலை. நமக்கு அதற்கெல்லாம் நேரமும் இல்லை; அதுபற்றி இப்பொழுது தேவையுமில்லை. ஆகையால் சுருக்கமாகவே சொல்லுகிறேன்.

இங்கிலாந்திலிருந்து கப்பல்வழியாகப் பிரான்சு கடற்கரைக்கு வந்தபின், ஏறத்தாழ 200 கற்கள் அந்த நாட்டிற்குள்ளேயே சாலை வழியாக மகிழுந்தில் வந்திருந்தேன் அன்றோ? அப்பொழுதே அந்த நாட்டின் அருமை பெருமைகளை எல்லாம் ஓர் அளவு உணர்ந்து உணர்ந்து வியந்து வியந்து மகிழ்ச்சிக்கடலில் நீந்தினேன். அப்பொழுதெல்லாம் நான் அமைதியாக விருப்பத்தைக் கண்டு, ஏதோ நான் எதையும் பார்த்துச் சுவைக்காமல் வருவதாகப் பொருள்படுத்திக் கொண்டு, மகிழுந்தை ஓட்டிக்கொண்டு வந்த அன்புருவம் பொற்செழியனும், அவருடன் வந்த தம்பிகள் இருவரும், அடிக்கடி என்னிடம் 'இ'து எப்படியிருக்கிறது?' 'அ'து எப்படியிருக்கிறது?' என்று கேட்டுக்கொண்டே வந்தனர். அதற்கெல்லாம் நான் ஒன்றுதான் விடையாகச் சொன்னேன், என்னால் பார்த்து வியக்கத்தான் முடிகிறது, தம்பி! சொல்ல முடியவில்லையே! ஏனென்றால் இவற்றையெல்லாம் விளக்கிக்கூற, இப்பொழுதைய என் சொல்லாற்றல் போதாது; அதற்கென்று தனியாகச் சொற்களைத் தேடி அல்லது உருவாக்கித்தான் சொல்ல முடியும்' என்று விடையாகக்கூறி வந்தேன். அந்த நிலைகளை ஒருவாறு, சுருக்கமாக உங்களுக்குக்கூற விரும்புகிறேன். அதற்குமுன்னர் உங்களுக்கு ஒரு வேண்டுகோள். நான் எழுதிய எதை நீங்கள் முழுமையாகப் படிக்கமாற்போனாலும், இத் தொடர் கட்டுரையையாகிலும் முழுமையாக, ஓர் எழுத்தும் விடாமல் படிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். அது அவ்வளவு நல்லது; பயனுடையது.

(தொடரும்)

## புத்துலகம் பத்து

முனைவன்

1. ஐந்தாண்டில் ஐந்திலக்கம் கொள்ளை அடிப்பதற்குக்
கந்தலுடுத் தலைகின்ற கண்ணீர்வாழ் மக்களிடம்
மைந்தனென்றும் காமனென்றும் மண்டியிட்டு
உறவாடும்
பிய்ந்தசெருப் பரசியலார் போயொளிந்தார்.
புத்துலகில்!

2. திருட்டுத் தொழிலெனவே தேட்டமெல்லாம்
பதுக்கிவைத்தே
இருட்டு வேளையினில் எண்ணியெண்ணி மகிழ்கின்ற
குருட்டுக் கயவர்களின் குடல்சரிய ஒன்றிணைந்த
முரட்டுக் கைகளினால் முளைத்ததுபார் புத்துலகம்!

3. கொள்ளையிடும் தொழிலாரும் குழிபறிக்கும் கயவோரும்
வெள்ளைமனம் உடையவர்போல வேட்பாள ராய்நின்று
பிள்ளையென முதலியென படையாட்சிக் குலத்தனென
நொள்ளைமொழி பேசுகின்ற அரசியல்தான்
நொறுங்கிதுபார்?

4. மேடையிலே ஏறிநின்று மேதினிக்கே உழைப்பனெனக்
கோடையிலும் வாடையிலும் கோவணமே உடுத்தலையும்
ஆடையிலா ஏழையர்பால் அவிழ்க்கின்ற பொய்ப்புளுகர்
பாடையிலே போகின்றார் பாருங்கள் புத்துலகில்!

5. மாறிவரும் குமுகாய மலர்ச்சியிலே நீரூற்றி
நாறிவரும் உழைப்பாளர் நலங்காக்க முனைகையிலே
ஊறிவரும் உடலோடு ஓலைபெற வருங்கயவர்
சீறிவரும் மறவர்களால் சிதைத்தனர்பார் புத்துலகில்.

6. குண்டிக்குக் கூழின்றிக் குளிருக்கும் ஆடையின்றி
நொண்டியுற்ற வாழ்க்கையிலே நோய்தனக்கும்
குறைவின்றி
மண்டியுற்ற மாடாக உழைக்கின்ற மக்களெலாம்
முண்டிவந்து போராட முளைத்ததுபார் புத்துலகம்!

7. அடிக்கின்ற காற்றதனால் ஆலெனவே குடில்பறக்கத்
துடிக்கின்ற மழலைகளைத் தோள்மீதில் அணைத்தமர்ந்த
கடிக்கின்ற கொடும்பசியால் கண்ணீரை வடிக்கின்றார்
வெடிக்கின்ற குழலெடுக்க விளைந்ததுபார் புத்துலகம்!

8. எடுத்துப் புரட்டதனால் ஏப்பமவிட் டலைகின்ற
பித்துத் தனங்கொண்ட பேயாட்சி அரசியலார்
சத்துங் கத்தெல்லாம் கழுதைகத்தும் சத்தென்றே
புத்துலகைச் சமைப்பவர்கள் புரண்டெழுந்தார்
பார்உலகில்!

9. மழைப்பொழுதும் வெயிற்பொழுதும் மானமின்றி
ஓலைபெற்று
தழைப்பதிகம் நாட்டுக்குத் தந்துவிடத் துடிப்பவர்போல்
உழைப்பாளர் குருதியதில் உலைவைக்கும் அரசியலார்
பிழைப்பேதும் இல்லாமல் பீடிழந்தார் புத்துலகில்!

10. கண்காது வாயடைக்கக் காலமெல்லாம் உழைத்தலுத்து
மண்மீதில் புரண்டலைந்து மக்களென வாழ்வோர்பால்
தண்ணீராய்க் காசளித்துத் தப்போலை பெறுவருடல்
புண்ணீராய்ப் பியந்தழிந்து போகுதுபார் புத்துலகில்!

## தமிழகத்தில் வந்தேறிகளின் வல்லாண்மை!

உலகில் உள்ள எந்த மாந்த இனமும் இங்கு வந்து தன் வாழ்க்கை எந்துகளை வளப்படுத்தி இங்கு வாழும் சொந்த இனத்தைச் சுரண்டிக் கீழே தள்ளி மேலே எழும்பும் நிலை இந்தத் தமிழகம் ஒன்றில் மட்டும் தான் உள்ளது. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற மாந்த மீமிசைப் பண்பாட்டுக் கருத்துக் கருவூலத்தை உலகத்திற்கு எடுத்துக் காட்டிய நம் இயற்கைப் பண்பாட்டு வளர்ச்சியாலும் உலகையே முதன்முதல் உண்டாக்கி மொழியாக்கிப் பரப்பி உலக இனத்திற்குத் தாயாகி இருக்கின்றமையாலும் தன்னிடம் உள்ள தாய்மை அன்போடு வந்தவரையெல்லாம் வாரி அணைத்துக் கொள்கிறோம். அடுத்தவர் வளமடைய நம்மையே ஈகம் செய்கின்றோம். அந்த ஈகத் தன்மைமையைப் பயன்படுத்தி இங்கு வாழும் தமிழ் நாட்டல்லாதார் தம்மை மேலும் மேலும் வளர்த்து அரசியலில் இருந்து மற்று எல்லாத் துறைகளிலும் புகுந்து தங்களின் வல்லாண்மையை வளர்த்துக் கொண்டு இங்குள்ள இனத்தைக் கீழே தள்ளி விடுகின்றனர்.

அரசியலில் தன் வல்லாண்மையைச் செலுத்தினால் மற்ற துறைகளில் தனது வல்லாண்மையை மிக எளிதாகச் செய்ய முடியும். அது தான் நம் பாண்டி சேர சோழ ஆட்சிக் காலத்தில் இருந்து நடந்து வருகின்றது. மிக மிக உறுதியான அடித்தளம் அமைத்து இந்தத் தமிழக வீட்டைக் கட்டியிருப்பதினாற்றான் இதனை அடியோடு அழித்துத் தகர்க்க முடியாமற் போகிறது. இல்லையேல் என்றோ இது இருந்த இடம் தெரியாமல் மறைந்திருக்கும். தங்களுக்குள் தங்களே பூசலிட்டுக் கலாம் விளைவித்து வந்தேறிகட்கு மிக எளிதில் தமது இடத்தை அள்ளித் தருகின்றனர். இல்லையேல் அது இன்று வெட்ட முடியாத படியும் உடைத்து எறிய முடியாத படியும் வளர்ந்திருக்குமா? என்ன!

இந்தத் தமிழ் நாட்டை எடுத்துப் பாருங்கள். பிற இனங்கள் தாம் கொழுத்து இருக்கின்றனவே தவிர, இந்த மண்ணின் பிறப்புகள் என்ன பயனைத் துய்த்து வருகின்றன? அரசியல், பொருளியல், கல்வியியல் ஆக எல்லாத் துறைகளிலும் இந்தச் சொந்த இனம் முன்னேறி உள்ளதா? இல்லையே! அரசியலை எடுத்துக் கொண்டால் அதன் தலைமையை எடுத்தாண்டு வரும் இனம் தமிழினம் அல்லவே! இன்றைய ஆளும் கட்சி அரசியலில் தமிழினமா ஆட்சி செய்கிறது. இல்லையே இன்னோர் இனம் தானே ஆட்சி நடத்துகிறது. ஒரு பெண்மை -

(தொடர்ச்சி 6-ஆம் பக்கம்)

# ஆரியர் இடுவலை அவிழ்க்க ஒண்ணதே!

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! நிரித்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!


# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்
பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-2 இதழ் எண் : 32 (5-2-84) பகுதி 6-7


## தமிழ் முன்னேற்றமும் தமிழர் முன்னேற்றமும்!

ஏனோ தெரியவில்லை, நம் தமிழ்த்தலைவர்கள், தமிழ்மொழியின் முன்னேற்றமே, தமிழர் முன்னேற்றத்தை மீட்டெடுக்கும் என்பதை முழுமையாக இன்னமும் உணராமல் இருக்கிறார்கள். மற்ற இனங்களுக்கு அவற்றின் மொழிகள், அதனதன் இன முன்னேற்றத்திற்கு உதவாமல் இருக்கலாம். தமிழின முன்னேற்றத்திற்குத் தமிழ்மொழியின் முன்னேற்றமே முதல் தேவை என்பதைக் கடந்த 25 ஆண்டுகளாகவே மிகவும் அழுத்தமும் திருத்தமுமாகப் பலவகையிலும் கூறிவருகிறோம். ஏனெனில் தமிழினம் வீழ்ச்சியடைந்ததே, தமிழ்மொழி வீழ்ச்சி வழியாகத்தான் என்பதை அனைவரும் உணரவேண்டும். எனவே தமிழ்மொழி மீளாமல் தமிழினம் மீள வழியே இல்லை.

நம் தமிழ்த் தலைவர்களுள் பெரும்பாலவர் தமிழ்மொழிக்கு ஏற்பட்டிருக்கும் தாழ்ச்சியைக்கூட உணர்ந்ததாகத் தெரியவில்லை. அவர்கள் இப்பொழுது தப்புந்தவறுடன் கலப்புத் தமிழில் கொச்சையாகப் பேசி வருவதும் எழுதி வருவதுமே தமிழ் என்று நினைத்துக்கொண்டிருக்கின்றனர். சிலபேர் ஆங்கிலத்தையும் இந்தியையும் மதிக்கின்ற அளவுக்குத் தமிழை மதிப்பதாகத் தெரியவில்லை. சிலபேருக்குத் தமிழே சரியாகத் தெரியாது. தம் தாய்மொழியைக்கூட சரியாகத் தெரிந்து கொள்ளாதவர்களெல்லாம் தமிழ்த் தலைவர்களாகவும் தமிழினத் தலைவர்களாகவும் உலாவரும் இழிவான நிலை இங்குதான் இருந்து வருகிறது.

'பொதுமக்களுக்கு விளங்காது'—என்னும் போலிக் கருத்தைக் கூறிப் பலபேர், கொச்சைத் தமிழிலேயே பேசியும் எழுதியும் வருவது மிகவும் இழுக்கானது. நம் தலைவர்கள் ஆங்கிலச் சொற்களைக் கலந்து பேசுவதையே பெருமையாகக் கருதுவதைப் போன்ற அடிமைத்தனத்தை வேறெந்த இனத்திலும் பார்க்க முடியாது.

தமிழை வளர்த்தெடுக்க முயற்சி செய்யாத எந்தக் கட்சியும் தமிழினத்தை ஒன்றுபடுத்தவோ முன்னேற்றவோ முடியவே முடியாது. ஒரு கட்சிக் கூட்டம் தமிழினக் கூட்டம் ஆகிவிட முடியாது. செயலலிதாவுக்குக் கூடும் கூட்டத்தைப் பார்த்துத் தமிழினம் ஒன்றுபட்டுவிட்டது என்று எவரேனும் கூற முடியுமா? போதுமான பணமிருந்தால் இந்த நாட்டில் எவரும் பெருமளவு கூட்டத்தைக் கூட்டிவிட முடியும். பத்து இலக்கமும் ஐந்து இலக்கமும் செலவழித்துக் கூட்டத்தைக் கூட்டுவது அவ்வளவு பெருமை கொள்ளக்கூடியது ஆகிவிடாது.

தமிழ்மொழி முன்னேற முன்னேறத்தான் தமிழினமே ஒன்றுபட முடியும். தமிழ்நாட்டுச் செய்தித்தாள்களில் ஒன்றுகூட நல்ல தமிழை எழுதுவதில்லை. பெரும்பாலான செய்தித்தாள்களில் எழுதுபவர்கள் எல்லாம் படித்தவர்களாக இருப்பினும் தமிழ் தெரிந்தவர்களல்லர்; அவர்கள் எழுதும் தமிழில் நூற்றுக்கு 10 விழுக்காடு இலக்கணப் பிழைகளும், 20 விழுக்காடு பிற மொழிக் கலப்பும் 10 விழுக்காடு கொச்சைத் தமிழுமே பயின்று வருவதை அவர்கள் உணரவே முடியாது. மேலும் பல செய்தித்தாள்கள் பொதுமக்களைக் கொள்ளையடிக்கவே நடத்தப்படுகின்றன. அவற்றால் தமிழ்மொழியோ, தமிழினமோ வளர முடியாது. அவற்றை நடத்துபவர்களுக்குத் தமிழ்ப்பற்றோ தமிழறிவோ, தமிழின முன்னேற்றத்தில் அக்கறையோ இருப்பதாக எவரும் கூறமுடியாது. பெரும் அளவு விற்பனையாகும் ஓரிரண்டு செய்தித்தாள்களில் 80 பங்கு விளம்பரங்களே வருகின்றன. மீதியுள்ள 20 பங்கிலும் கொலை, கொள்ளை, கற்பழிப்புப் போன்ற செய்திகளே வெளியிடப் பெறுகின்றன. இவற்றால் நம் மக்கள் மூடர்களாகவும், கொடியவர்களாகவும் மாற வாய்ப்புகள் உள்ளனவே தவிர, முன்னேறுவதற்கு ஒரு சிறிதும் வாய்ப்பில்லை.

சென்ற இதழ்த் தொடர்ச்சி :

## இனம் ஒன்றுபட வேண்டும் என்பது எதற்கு?-6

வெறும் கூட்டணிகள் சேர்ப்பதும். மாநாட்டு மேடைகளில் ஒன்று சேர்ந்து ஒரு வரிசையில் நாற்காலிகள் போட்டு அமர்ந்து காட்சி தருவதற்கும் நாம் இப்பொழுது ஒன்று சேர்கிறோம். இதனால் யாருக்கு என்ன பயன் விளையப் போகிறது? மாநாடு கூட்டுபவர்களுக்குத்தான் பண வருவாய் பெருகுகிறது. வெறும் பேச்சுக்காக நாம் ஒன்றுகூடி பகல் முழுவதும், இரவு முழுவதும், மக்களை அமர்த்திவைத்துக் கொண்டு இல்லாததும் பொல்லாததுமாகப் பேசி மக்களைச் சிரிக்க வைத்துக் கைதட்ட வைத்துக் கலைந்து போகச் செய்வதால் ஒரு துளி நன்மையும் விளையாது. செயல்களுக்காகவே நாம் ஒன்று சேரவேண்டும். ஒருவரே மணிக்கணக்காகப் பேசலாம்; மக்களை மகிழவைக்கலாம்! ஆனால் அனைவரும் ஒன்று சேர்ந்தால்தான் ஒரு செயலை இன நலத்துக்கான ஓர்ஆக்க வினையைச் செய்ய முடியும். தனித்துப் பேசுவது போல் தனித்துச் செய்ய முடியாது. தனித்துப் பேசலாம்; ஆனால் கூடித்தான் செய்ய முடியும். இப்பொழுது நாம் தனித்துப் பேசிக் கொண்டிருப்பதைக் கூடிப்பேசிக் கொண்டிருக்கிறோம். பேசிக்கொண்டிருப்பவர்கள் ஒன்று சேர்ந்தால் செயல தொடங்கிவிட வேண்டும். ஆனால் எந்தச் செயலையும் இனநலம் நோக்கி இன்னும் நாம் செய்துவிடவில்லை. பேசுகிறோம்; பேசிக்கொண்டே இருக்கிறோம்.

செயல் என்று தொடங்கிவிட்டால் பேச்சு குறைய வேண்டும். ஆனால் மேலும் மேலும் பேச்சை நாம் வளர்த்துக் கொண்டே உள்ளோம். முன் நாளில் பேசத்தெரிந்தவர்கள் பேசினார்கள்; கருத்தை உணர்ந்தவர்கள் மக்களிடம் பேசி—எடுத்துக் கூறி—அவர்களை விழிப்படையச் செய்தார்கள். இப்பொழுது பேசத்தெரியாதவர்களும், கருத்தை உணராதவர்களும் மக்களிடம் பேசி, அதை ஒரு நாடகமாகவே ஆக்கி வருகிறோம். பேச்சு ஒரு கலையாக—பலர் கூடிச் சுவைப்பதற்காக-ஒரு நாடக பாணியாக-வளர்ந்து விட்டதே தவிர—வளர்த்து விட்டோமே தவிர, அதைப் பயனுக்காக-செயலுக்காக—அதுவும் இனநல முன்னேற்றத்திற்காகப் பயன்படும்படி செய்யத் தவறி விட்டோம். இப்பொழுது நாம் பேசுவதற்காக ஒன்று கூடுகிறோம்! ஒன்றுகூடிப் பேசுகிறோம்; செயல் செய்வதற்குமுன் பிரிந்து விடுகிறோம். மீண்டும் பேசுவதற்குக் கூடுகிறோம். இவ்வாறு பேச்சே செயலாகப் போய்விட்டது! செயலே பேச்சாகவும் போய் விட்டது. அதனால், பேச்சும் ஒரு பெருத்த வருவாயைத் தரும் தொழிலாகவும் வளர்ந்து விட்டது. பேச்சுத் தொழிலாளர்கள் இன்று ஏராளமாக உருவாகி விட்டனர். எனவே செயல் நோக்கமே அடிபட்டு விட்டது; அழிந்தும் விட்டது!

திருக்குறளில், 'பயனில சொல்லாமை' என்று ஓர் அதிகாரம் உள்ளது. அதில் எப்படிப் பேசவேண்டும், என்ன பேச வேண்டும்; எதற்காகப் பேச வேண்டும், பேசுபவற்றைப் பேசாமல் இருப்பதாலும், பேசாதவற்றைப் பேசுவதாலும் என்னென்ன கேடுகள் விளையும்—என்பவை பற்றியெல்லாம் மிக விளக்கமாக, மிக விரிவாக விளக்குகிறார் திருவள்ளுவப் பேராசான். இன்று, அந்த அதிகாரத்தையே பயனற்றதாக்கி விட்டோம், நாம்! பாழாக்கி விட்டோம் நாம்!

அந்த அதிகாரத்தில் ஒரு குறள்.

நயன்சாரா நன்மையின் நீக்கும், பயன்சாராப்
பண்பில்சொல் பல்லா ரகத்து (194)

அஃதாவது. தேவையான பயனைத்தராத. பண்பில்லாத-வெறும் சொற்களை ஒருவர் பலரிடையில், அஃதாவது பொதுமக்களிடையில் சொல்லுவாரானால்; அச் சொற்கள நயமான (ஞாயமான) அறத்தின் பாற்பட்ட விளைவுகளை உண்டாக்காமல்போவதுமன்றி, நன்மையல்லாத விளைவுகளை உண்டாக்கித் தீமைகளைத் தந்துவிடும்-என்று திருவள்ளுவப் பெருந்தகை பேச்சுக்காரர்களைப் பார்த்து எச்சரிக்கின்றார். எத்தகைய அரிய எச்சரிக்கை இது.எவ்வளவு உண்மையானது. கடந்த இரண்டாயிரம் ஆண்டுகள் நம் கையிலிருந்தும் நாம் கவனிக்காமல் அழுக்கேற விட்டுவிட்ட அரும் பொருள் இது; துருப்பிடிக்க விட்டுவிட்ட முதுசொம் (பழஞ்சொத்து) இது!

இக்கால் நமக்கு — நம் இனத்துக்கு நேர்ந்துவிட்ட, நேர்ந்துவரும் கேடுகளுக்குக்கெல்லாம் உண்மைக் காரணம் இக் குறளில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது; பேச்சால் பயன் விளைய வேண்டும், ஆனால் தீமைகள்தாம் விளைந்து வருகின்றன. அறிவு பேச்சாக வெளிப்பட்டுச் செயலாக விளைவு தர வேண்டும். அல்லாக்கால் அந்தப் பேச்சால் ஒரு பயனும் இல்லை. அத்தகைய பேச்சு பயனில்லாத பேச்சு. அப்படிப் பயனில்லாத பேச்சைப் பேசுபவர்கள் மக்களில் பதர்கள்! அப் பதர்கள் போன்றவர்களைப் பாராட்டுபவர்களும் புகழ்பவர்களும் வெறும் பதர்களே! (குறள் 196) இக்கால் பதர்களே மிகுந்து விட்டன. செயலாகிய நெல் விளையவில்லை. பதர்களாக விளைந்ததால்தான் நம் பசிக்கு — தேவைக்கு அது பயன்படவில்லை.

இப்படிப் பயன்படாத பதர்களை விளைவிப்பதற்கு நாம் ஒன்று சேர வேண்டாம்;வேண்டவே வேண்டாம். செயலுக்காகத்தான் நாம் ஒன்று சேர வேண்டும். அதுவும் இனத்தை மீட்கின்ற செயலுக்கு, மக்கள் புரட்சிக்குத்தான் நாம் ஒன்று சேர வேண்டும். அவ்வின நலப் புரட்சிக்கு நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து எழும் அந்த நல்ல நாளை நாம் விரைந்து வரவேற்போமாக!

(முற்றும்)

நம் நாட்டில் அரசியல் பேசுகின்ற அனைவரும் பெரும்பாலும் உலக அறிவு இல்லாதவர்களே! தமிழறிவு அவர்களுக்கு அறவே இல்லை. தமிழை ஒருவரி கூட, பிழையில்லாமல் அவர்களால் எழுதவோ பேசவோ முடிவதில்லை இந்த நிலையில் நம் இனம் எவ்வாறு முன்னேற முடியும் என்பதை உண்மைத் தமிழன்பர்களும் உண்மையாகத் தமிழர் நலம் நாடும் அறிஞர்களும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

'அரசு' என்பதைச் 'சர்க்கார்' 'கவர்ன்மென்ட்' 'அரசாங்கம்' என்றும், 'குழு' என்பதைக் 'கமிட்டி' என்றும் செய்தித்தாளைப் 'பத்திரிகை' என்றுமே இப்பொழுதுள்ள பெரிய பெரிய தலைவர்களும் பேசி வருகின்றனர். எனவே மொழி அடிமை நீங்காத வரையில் இன அடிமை நீக்கத்திற்கு வழியே இல்லை என்பதையும், மொழி முன்னேறாத முன்னேற்றம் கால்கிணறு அரைக்கிணறு தாண்டுவதைப் போன்றதே என்பதையும் திட்டவட்டமாக அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். 0

## திருவள்ளுவர் நாள்காட்டி

வழக்கம்போல் நெய்வேலி, உலகத் தமிழ்க் கழகம் வெளியிட்டுள்ள 'திருவள்ளுவர் நாள்காட்டி' வரப்பெற்றோம். தமிழ் எண்கள் முகாமையாகவும், ஆங்கில மாத எண்கள் சிறிய அளவிலும் அச்சிடப் பெற்றுள்ளன. அறிஞர்களின் பொன்மொழிகள், பிறப்பு இறப்புநாள் குறிப்புகள், அரசு விடுமுறை நாள்கள் முதலிய அனைத்துத் தகவல்களும் அடங்கி இரு வண்ணத்தில் அச்சிடப்பெற்ற தூயதமிழ் மாத நாள்காட்டியாகும் இது. விலை குறிக்கப் பெறவில்லை.

விளத்தங்களுக்கு.

கு. முகிலன் பொருளர்
உ.த.க கிளை 34 B. நகர்க் கூறு-5. நெய்வேலி-607 803.

### தமிழ்நாட்டில் உள்ள கோயில் நிலங்கள்

0 தமிழ் நாட்டில் உள்ள கோயில்களுக்குச் சொந்தமான மொத்த நிலங்கள் 5 இலக்கத்து 50 ஆயிரம் குறுக்கம்(ஏக்கர்).

0 மடங்களுக்குச் சொந்தமான நிலம்: 50 ஆயிரம் குறுக்கம்.

0 இந்த மொத்த 6 இலக்கம் குறுக்க நிலங்களில் பயிர் செய்பவர்கள் குத்தகை தருவதில்லை. 0

# அவர்திறம் அறிவென மயங்கி எண்ணாதே!

உ.த.மு.க. உறவு மடல்!

# ஆசிரியர் பக்கம்.

— பறம்பை அறிவன்.

தோழமை உள்ளவர்களே,

அன்றும் இன்றும் ஆசிரியர், மாணவர் அனைவரும் அரசியல் போராட்டங்களில் ஈடுபட்டே வந்திருக்கின்றனர்.

ஆனால் வழக்கம்போல் 'குடியரசுத்தலைவர்' அரசியலின் பக்கம் ஆசிரியர்கள் தலைகாட்டுவதைக் கண்டித்துள்ளார்.

குமுகாய மாற்றம், புதிய தலைமுறை உருவாக்கம் யாவும் ஆசிரியர்கள் கையில் இருப்பதாகக் கூறிக் கொள்ளும் அதே வேளையில், அரசியலில் ஆசிரியர்கள் ஈடுபடுதல் கூடாது என்பதை என்னவென்று சொல்வது?.

'படிப்பறையை விட்டுச் சற்று வெளியே வந்து பாருங்கள்; உங்கள் விடைகளைத் தெருக்களில் தேடுங்கள்' என்று கூறும் இலெனின் பேச்சைச் சற்றுக் கேளுங்கள்!

மாணவர்களுக்காகக் கூறிய இந்த அறிவுரை 'வாழ்நாள் மாணவர்களாகிய' ஆசிரியர்கட்கு மிகப் பொருந்துவதாகும்,

'சாதிகள் இல்லை', என்று பாடும் ஆசிரியர் 'இவர் இன்ன சாதி' எனப் பதிவேட்டில் எழுதி வைக்கிறார். 'அச்சம்தவிர்' என உரக்கச் சொல்லித் தரும் அவர், அதிகாரிகளுக்கும், அரசியல் கட்சிக் காரர்க்கும் அடங்கிக் கிடக்கின்றார். 'பொய் சொல்லக் கூடாது' என்று படித்துப் படித்துச் சொல்லிக் கொடுக்கும் அவர் 'புராணப் புளுகு'களை நாளும் நம்பும்படி கதைக்கிறார்.

இப்படி 'வாழ்க்கையோடு' வாழ்நாளெல்லாம் முரண்பட்டுக் கிடக்கும்படி ஆசிரியரைப் பணிக்கின்றவர்கள் 'மாற்றம்', 'புரட்சி' பற்றிப் பேசுவது பகடியானது: பழிப்புக்குரியது!

கிடைக்கும் கல்வி வாய்ப்பையும் பயன்படுத்திக் கொள்ளும் நிலைமையில் மக்கள் இல்லை. பள்ளிக்குச் செல்லவேண்டிய குழந்தைகள், தீப்பெட்டிக் குச்சி அடுக்குவதும், ஆடுமாடு மேய்ப்பதும் காண்கின்றோம். தப்பித் தவறிப் படிக்கப் போகின்ற குழந்தைகள் கட்டேந்தி நிற்கின்ற அவலத்தையும் பார்க்கின்றோம்.

குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவதைத் தடுக்கும் சட்டம் பேரளவிலேயே உள்ளது.

அறிவு, பிறர்துயர் நீக்கப் பயன்படுதல் வேண்டும், என வள்ளுவம் கூறும்; ஆனால், இன்று அறிவு வணிகப் பண்டமாகி விட்டது. உழைப்பைச் சுரண்டும் வாகான கருவியாக அறிவு செயல்படுகின்றது!

தேசிய உணர்வினைச் சாகடிக்கின்ற நடைமுறைதான் நாட்டில் உள்ளது.

அடிமையுணர்வை ஊட்டும் 'தேசியப் பாடலான சன கண மன' பற்றி ஆசிரியர்கள் சிந்தித்ததுண்டா? இந்தியாவிலும் சரி, தமிழ் நாட்டிலும் சரி, விடுதலையுணர்ச்சியை வளர்க்கின்ற எந்த ஆசிரியரேனும், 'ஐந்தாம் சார்சு மன்னனைப் பாவாடை விரித்து வரவேற்ற சனகணமனப் பாடலை' எதிர்க்கத் துணிந்ததுண்டா? துணிந்தால் இந்த அரசுதான் சும்மா விடுமா?

ஆசிரியர்களே, உங்களின் ஊதிய உயர்வுக்காகச் 'சங்கம்' கூட்டிப் போராடி வந்தீர்களே' அதனால் பெற்ற விடுதலைதான் என்ன? உங்களின் உயர்வு உங்கள் தன்மானத்தில் உள்ளது; அது தேசிய மானத்தோடு பின்னிக் கிடப்பதாகும். எனவே, போராடுவது அறியாமையைப் பலிகொடுப்பதற்காக என்று முடிவாற்றுங்கள்!

சட்டைகளில் 'என்னை, முத்தமிடு', 'காதலி', 'நில்கவனி' என்று ஆணும் பெண்ணும் அச்சிட்டு அணிந்து கொள்கிறார்கள். கல்லூரி மாணவர்களிடையே இந்தப் போக்கு வளர்ந்து வருகிறது.

திரைப்படங்கள் இளையதலை முறைகளைத் தடம்புரளப் பண்ணுகின்றன. அவர்களின் தடந்தோள்களை வீரத்தால் விம்மப் பண்ண வேண்டிய காலத்தில், சோகத்தாலும், காதல் கிளுகிளுப்பினாலும் கூம்பப் பண்ணுகின்றன!

இந்த நிலைமைகளில் ஆசிரியர்களின் பணி என்ன பயனை விளைவிக்க முடியும்?

தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணி ஒருமுறை கல்விக்காகக் 'கச்சாபடச்சுருளை'ப் பயன்படுத்தும் படி நடுவண் அரசுக்குத் தீர்மானம் போட்டு வேண்டுகோள் விடுத்தது. அவ்வணியின் நல்ல நோக்கம் எப்போது' நிறைவேறும்?

அப்படி நிறைவேறினாலும், இந்த மலட்டுக் கல்வி முறையை இக் கலைவடிவம் பரப்புவதால் பெருங்கேடு விளைந்தாலும் விளையுமேயன்றி, நன்மை விளையும் என்று நம்பமுடியவில்லை!

ஆசிரியர்கள், வேலையை விலை தந்து பெறுகிறார்கள், காலம் முழுமையும் அடிமைக் கல்வியைப் பரப்பியதால் ஆசிரியர்களிடமும் ஒரு சோர்வும் தொய்வும் நிகழவே செய்யும்!

கல்விப் பணியில் பெருந்தடைக் கல்லாக இருப்பது தனியுடைமை எண்ணம்—

கல்விநிறுவனங்கள் தனியார் கைகளில், சாதி' மத வளர்ப்புப் பண்ணைகளாகி விட்ட கல்விக் கூடங்களை நினைக்க நெஞ்சம் நடுங்கும்.

அரசையும், அதிகாரிகளையும் ஏவல் நாய்களாக்கி விட முடியும் என்ற போக்கு தனியார் கல்வி நிறுவனங்களில் தலைதூக்கி நிற்கிறது!

இருந்தும். அமைச்சர்களும், கட்சிகளும், இயக்கங்களும், தனியார் துறையில் தரம் இருப்பதாகத் தம்பட்டம் போடுகின்றன. இவற்றில் நெறி விலக்காக உள்ளனவும் உண்டு' என்றாலும் அவை ஒன்றுபட்டு நின்று குரலெழுப்பவில்லை!

கல்வி, ஆசிரியர், மாணவர், குமுகாயம் பற்றிய சரியான கண்ணோட்டம் பொதுமக்களிடம் வளரப் பாடுபடுவோம்: அது, தமிழினத்தையும் தலைதூக்க வைக்கும் இல்லையேல் தலை தொங்கப் போட வேண்டிவரும்!

அறிவுப் புரட்சி உரம்பெற வேண்டிச்
செறிவுறத் தொண்டாற்று வோம்

அன்புடன்,
பறம்பை அறிவன்

# இலங்கைத் தமிழரும் தமிழகத் தாழ்த்தப்பட்டோரும்!

இதுவரை எந்த இனமும் கண்டிராத மாந்தக் கொடுமைகட்டு அப்போதைக்கப்போது ஆட்பட்டு வரும் இலங்கைத் தமிழர்கள் தங்களின் அடிமைத் தளையை அறுப்பதற்குத் தங்கள் உயிரை ஈகம் செய்து வருகின்றனர். அவர்கட்டு ஏற்பட்டு வரும் கொடுமைகள் எந்த அடிமை மாந்தருக்கும் ஏற்பட்டிராது. பண்பாட்டின் முதிர்ச்சியில இருக்கும் ஒரு மாந்தப் பேரினத்தை காட்டு விலங்காண்டிக் கூட்டம் வெறி நாயினும் கீழாக வேட்டையாடுவது இன்றுதான் உலக மன்பதையின் கவனத்தை ஈர்த்துள்ளது: பண்பாடே நாகரிகமே இல்லாத கொடிய விலங்குகளின் செயலை அப்படியே கொண்டுள்ள ஒரு சிற்றினம், அந்த நாட்டில் தமிழ்ப் பேரினம் சிறுபான்மையாக உள்ளதால் தம் கொலைவெறியை அன்றும் இன்றும் தீர்த்து வருகிறது. கடந்த சூலை, ஆகத்துத் திங்களில் நடந்த கொடுமைகள் உச்சிக்கேபோய்விட்டன. வாழ்வா, சாவா என்ற நிலைவரும் போது எதற்கும் துணிந்து செயல்படும் ஒரு பேராற்றல் யாருக்கும் வரத்தான் செய்யும். அழிக்கப்பட்டு வரும் அடிமையரில்தான் அரிகளும் வரிகளும் தோன்றுவர். அப்படித்தோன்றித்தான் இன்று உலகில் உள்ள ஒட்டு மொத்தமான தமிழினத்திற்கே தாங்கள் மட்டுமே முயன்று தனிநாடு சமைக்க இருக்கின்றனர் அப்போராளிகள்.

இங்கு இந்தத் தாய்த்தமிழகத்தின் நிலையென்ன! இன்னும் ஆரியத்தின் சாதிய அமைப்பு முறையை இறுகப் பற்றிக் கொண்டு, நீ தாழ்ந்தவன் நான் உயர்ந்தவன் என்று அடிக்கடி பூசலிட்டுக் கலாம் விளைவித்துக் கொண்டு தங்களைத் தாங்களே அழித்துக் கொள்வதும் தானே நடந்து வருகின்றது. தாழ்த்தப் பட்ட மக்கள் இப்போதுதான் தங்கள் அடிமைத் தளையை உடைத்தெறிய வீறு கொண்டு எழுகின்றனர். அவர்களின் உணர்ச்சியை அடித்தும் நொறுக்கியும் அவர்களின் எழுச்சியை மிதித்தும் துவைத்தும் தாங்கள் உயர்ந்தோர் என்று கூறிக் கொள்பவரும் காவல்துறையும் அரசு வல்லாண்மையும் செய்து வருகின்றனர். ஒடுக்கப் பட்டவர்கள் என்றும் அடங்கிக் கிடப்பதைத்தான் இவர்கள் விரும்புகின்றனரா? இந்த உண்மைத் தமிழர்களை இங்கு அழித்துவிட்டு ஈழத் தமிழர்கட்கு மட்டும் குரல் கொடுப்பது 'ஊரோடு அழுதாளாம் ஒப்புக்கு ஒவாய்ச்சி' என்ற கதையாகத் தானே உள்ளது. தாழ்த்தப்பட்ட மக்களில் பள்ளர் என்ற பெயரைத் தாங்கியுள்ளோர்கள் என்னவோ தங்களின் இயற்கையான மறவுணர்ச்சி கரணியமாக அடிமைத் தளையை ஒடிக்க அப்போதைக்கப்போது ஆர்ப்பரிக்கின்றனர். எல்லோருமாகச் சேர்ந்து கொண்டு அவர்களை அழிக்க எண்ணும் போது ஈழத்தில் உள்ளவர்கள் தாம் தமிழர்களா? நாங்கள் தமிழர்கள் இல்லையா? என்றுதானே கேட்பர். இலங்கைச் செயவர்த்தன அரசு,காவல்துறை, படைத்துறைச்சிங்களக் காடையருக்கும் இங்குள்ள அரசு, காவல்துறை, மற்ற தமிழ் மக்களுக்கும் என்ன வேறுபாடு என்று

தான் கேட்கின்றனர் .கேட்பதில் தவறு என்ன?

உண்மையான உழைப்பினர்களாகவும் பண்பாட்டினர்களாகவும் உள்ள இந்தத் தமிழரை இன்னும் அடிமைப்படுத்தி வைக்க எண்ணினால் இங்கு ஒரு பெரிய ஈழப் புரட்சி போன்றுதான் வெடிக்கும்! அதனை இங்கிருக்கும் உண்மைத் தமிழர்கள் ஓரளவாவது உணர்வார்களாக.

— வல்வில் ஓரி

# 'மனஓசை'யின் மனமாசைக் கடிந்து ஒரு மடல்!

அன்புகெழுமிய ஐயா,

சென்னையிலிருந்து வெளியிடப்பெறும் 'மனஓசை' எனும் 1984 சனவரி இதழை நான் பார்க்கும் கட்டாயம் ஏற்பட்டபோது, தங்களைப்பற்றிய சிறு மொழி கண்டு வெகுண்டு அதன் ஆசிரியருக்கு இன்று ஒருமடல் எழுதியுள்ளேன்; அதன் விளக்கம் பின்வருமாறு:—

"தொல்காப்பியர் தூயதமிழர் என்று பல புலவர்கள் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர் சரியான பார்ப்பனர். அப்படி இருந்ததனாலே பல ஆரியக் கொள்கைகளைத் தொல்காப்பியத்திலே புகுத்தியிருக்கிறார்' -பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

'நிலவுடைமைக் கருத்துகளில் ஆரிய நிலவுடைமைக் கருத்தைவிடத் தமிழரின் நிலஉடைமைக் கருத்துகள் தூயவை; உயர்ந்தவை; தமிழர்கள் வர்க்க வேறுபாடே இல்லாது வளர்ந்துவிட்ட இனம்' என்பன போன்ற பொய்ப்பெருமைகளை அவிழ்த்து விட்டு மேய்ச்சல் நடத்திக்கொண்டிருக்கின்றன சில ஏறுகள்; இவர்களில் ஒருவர்தானே 'பாவலரேறு'.

-இது மனஓசையில் காணப்பட்ட சிறுமொழி'.

இதற்கு நான் எழுதிய இடித்துரைமடல் கீழே அன்புடன் காண்க.

ஐயா, தங்களின் 1984 சனவரி திங்களின் முதல் 'மனஓசை' இதழைப்பார்க்கும் கட்டாயம் ஏற்பட்டது இலக்கிய இதழுக்குரிய கண்ணோட்டமோ, 'எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும்' 'எப்பொருள் எத்தன்மைத்தாயினும்'- அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு' எனும் பொய்யா மொழியின் தமிழ்நெறியோ அதில் காணப்படவில்லை. 'தமிழை வைத்துத் தின்பார், தாயின் உயிரை உண்பார்' எனும் பாவேந்தரின் கூற்றை உண்மையாக்கும் தமிழ்நாட்டுக் குப்பை இதழ்களில் ஒன்றாக 'மனஓசை'யும் தோன்றலாமா? 1 - 1 - 1982- ஆம் நாளில் ம.உ.க. நண்பர் ஒருவர் 'மனஓசை' முதல் இதழைக் காட்டி, அதற்குரிய என் கருத்துரையை எழுதியனுப்பக் கேட்டுக்கொண்டதனடிப்படையில் என் மதிப்புரையையும் நல்வாழ்த்தையும் அனுப்பி வைத்தேன் ஆனால்இந்தஇதழில்,'தொல்காப்பியர்பல ஆரியக்கொள்கைகளைத் தொல்காப்பியத்தில் புகுத்தி இருக்கிறார்' என்ற பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் ஆய்வுரையைத் தக்கமுறையில், இலக்கிய நோக்கில் திறனாய்வு வழி மெய்ப்பொருள் உணர்ந்து தெளிந்து மறுப்பதற்கு அனைவருக்கும் உரிமையுண்டு. ஆனால் 'பொய்ப்பெருமைகளை அவிழ்த்துவிட்டு மேய்ச்சல் நடத்திக்கொண்டிருக்கும் சில ஏறுகளில் ஒருவர் தானே பாவலரேறு' எனப்பொருளற்ற சிறுமொழி, தூயதமிழ் நெஞ்சங்களை புண்படுத்துவதாக உள்ளது. உண்மையான இலக்கிய உணர்விருப்பின் தங்களை அறியாமல் அது வெளியிடப்பட்டிருப்பின், அதற்கு மன்னிப்பும் வருத்தமும் உடனே தெரிவித்தல் உமக்குப் பெருமை. தவறினால், தமிழ்மறையின்

"நலத்தின்கன் நாரின்மை தோன்றின் அவனைக்
குலத்தின்கண் ஐயப் படும்" எனும் வாய்மொழி

உமக்குப் பொருந்துமென இடித்துரைப்பது தமிழரின் உரிமையும் நயன்மையுமாகும்.

புலவர். கோ. உன்ஒளி, அறி.இ:ச.இ.
திருப்பத்தூர் (வ.ஆ.)

## தமிழகஅரசின் தமிழ் இனத்தைக் கருவறுக்கும் இழிசெயல்!

தமிழ்நாடு அரசு நிறுவனத்தின் அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் 1984-ஆம் ஆண்டின் நாளிகையில் தமிழரின் ஒரே விழாவான பொங்கல் திருவிழாவிற்கு, விடுமுறை காணப்படவில்லை; ஆனால் ஆயுதபூசை, தீபாவளி, பக்ரீத், கிறித்துமசு போன்றவைக்குக் கழக விடுமுறை உள்ளது.

தமிழக அரசின் இதுபோன்ற நயன்மையற்ற செயல்கள் கடுமையான கண்டனத்திற்கும் இடித்துரைக்கப்படுவதற்குமுரியது. இந்நிலையைச் செந்தமிழர் இனியும் உணர்ந்து தக்கவாறு செயல்படவில்லையெனில் 'தமிழ் இனி மெல்லச் சாகும்' எனும் கூற்று உண்மையாகலாம்.

தமிழரைப்போல் நடித்துத் தமிழையும்,தமிழகத்தையும், உண்மைத் தமிழரையும் ஏய்க்கும் நிலையை அறவே நீக்க, செந்தமிழர் 'பெரும்பொங்கல்' திருநாளில் ,தூயதமிழரசு' நிறுவ நெஞ்சில் வஞ்சினங் கொண்டு செயல்பட்டு எண்ணிய எண்ணியாங்கு எய்தும் நாள்தான் தமிழரின் உண்மையான பொங்கல் நாள் ஆகும்!

— உன்ஒளி.

# இருக்கும் நலன்களில் இனநலம் பெரிதென

# ஐரோப்பாச் செலவில் உறவாடிய ஆர்வ நெஞ்சங்கள் வரைந்தவை!

**தாய் திரும்பி வரும் வரை, காத்திருக்கும் பாலகனைப்போல் காத்திருக்கிறோம்!**

பேரன்பிலே பெருமலையென எமக்குக் கிடைத்தற்கரிதாகக் கிடைக்கப் பெற்ற எம் பெருந்தமிழ்ப் புதையலே!

யாம் இருகைகள் என பல கைகள் கூப்பிப் பணிகின்றோம்.

ஐயா,

வணக்கம் பல. நலமே பெறுக. என்றும் எம் வாழ்த்துகள்!

ஐயா, எங்களையெல்லாம் தாங்கள் விட்டுப் பிரிந்த பின்னர் யாங்கள் இருந்த நிலையை என்னென்று உரைப்போம் ஐயா? பாலை நிலத்திலே நாவற்றி, நடை தளர்ந்து, நான்றுவிடும் நிலையிலே நிற்கும் ஒருவன், தண்டமிட்டுத் தலை உயர்த்தித் தண்ணீரை வேண்டி, இறைவனை மன்றாட, எங்கிருந்தோ ஒருதுளி நன்னீர் அவன் நாவிலே விழுங்கால் அவனடையும் மகிழ்ச்சிக்குத் தான் ஈடேது? இணையேது? அவ்வாறே...யாம் தமிழ்நாட்டை விட்டு வந்த பின்னர், பிற மொழியிலேயே பிணைந்து பேதலித்துக் கொண்டிருந்த வேளை, தாங்கள் இங்கே வந்து, எமக்குக் கிடைப்பதற்கரிய தேவாமிழ்தம் எனப்படும் திருக்குறளின் விரிவுரைகளையும், தமிழின முன்னேற்றத்திலே ஒவ்வொரு தமிழனின் கடமை என்ன என்பன பற்றியும், சொற்பொழிவாகிய தேன்துளிகளிலே எமக்கு ஒரு சில துளிகளையே அளித்துவிட்டு, அச்சுவையினையே என்றென்றும் நினைந்து நினைந்து ஏங்க வைத்துவிட்டுச் சென்றீர்களே ஐயா! மீண்டும் பலமுறை, அச் செந்தமிழ்த் தேனை யாம் பருகத் துடிக்கின்றோம். (பரிதவிக்கின்றோம்) விரைவிலே அந்நிலை மீண்டும் கிடைக்குமா ஐயா, என்ற எம் கேள்விக்குத் தங்களின் அடக்கமான சிரிப்பொன்றே விடையாக, எம் கண்முன்னே தோன்றி மறைகிறது

ஐயா, நெடுவழிச் சென்ற வழிப்போக்கன்; தான் சேர வேண்டிய இடமறியாது தவிக்கும் வேளை, திடீரென வானத்திலே தோன்றிய வால்மீன் ஒன்று வழிகாட்டிச் சென்று, அவனைச் சேரவேண்டிய இடத்திலே கொண்டு சேர்த்ததாம்! அந்நேரம் தன் உள்ளத்திலே எழுந்த மகிழ்வான பெரும் நன்றியை, அவ்வால்மீனுக்கு அவன் புகலும் முன், அந்த மீன், தான் வந்த வழிச்சுவடு தெரியாது கணநேரத்தில் மறைந்துவிட்டதுபோல், நெடுங்காலமாக, எம் கண்களையும் கருத்துகளையும் கட்டிப் போட்டுக் காட்டில் விட்ட நிலையிலே, எம் செவிகளும் மந்தமிட்டு, மடையிட்டுப் போயிருந்தவேளை, அந்நேரம், தென்றலிலே கலந்து வந்த தங்களின் இன்பத் தமிழ்த் தேவ இசையை இனிமையாகப் பாடி, எம் கண்களையும் கருத்துகளையும் கட்டியிருந்த கட்டுகளை அவிழ்த்து, எம் செவிகளுக்குப் பைந்தமிழ் விருந்திட்டுவிட்டுப் பறந்துவிட்டீர்களே ஐயா! வீட்டைவிட்டுச் சென்ற தாய் திரும்பி வரும்வரை வழி பார்த்து வாசலிலே பல மணிக்காலம் காத்திருக்கும் பாலகனைப்போல், தங்களை மீண்டும் காணக் காத்திருக்கிறோம், ஐயா! அந்த வால்மீனின் வழி வந்தவர்தாமோ தாங்கள். யாம் அறியோம்!

ஐயா, தங்களை ... இதுபோல் பன்முறைகள் மகிழ்விக்கும் பேறு எமக்குக் கிட்ட வேண்டுமென வேண்டிக்கொள்கிறோம்... எப்பிறவியிலும் எம் உள்ளம் கவர்ந்த தங்களின் இசைவிற்கு ஏற்ப. எங்கள் கடமைகளைச் செவ்வனே செய்ய யாம் காத்துள்ளோம் ஐயா!

ஐயா, தாங்கள் வந்திருந்தபோது இருந்த நிலை போலவே, இயக்க நிலைகளிலும், கொள்கை நிலைகளிலும், ஐயா அரிமா (அமைப்பாளர், பிரான்சுக்கிளை) உடன் ஒத்தியங்கிப் பாடாற்றி. எம் உண்மையான தொண்டைத் தமிழ்மொழிக்கும், தமிழினத்திற்கும், முழுப்பயன் தருமாறு, பணியாற்றக் காத்திருக்கிறோம் எனக் கருத்தளிக்கிறோம்.

........ அவர்களின் நய(நியாய)மற்ற இயக்க நிலைமைகளையும், செய்திகளையும் கண்டு, தந்தையார், தாயார், எம் துணைவியார், ஐயா அரிமா, தம்பி சொல்லின் செல்வன் (பிரான்சுக் கிளைச் செயலர்) யாவருமே மிக்க மனத்துயர் அடைந்தோம், நல்லது தோன்றுங்கால், பல இன்னல்களும் இடையூறுகளும் இடைமறைப்பது இயல்பே! தாங்கள் அறியாதது ஒன்றுமில்லை முன் நிலையைவிடச் சந்தனத்தைத் தீயிட்டுச் சுடும்போதுதான் தன் முழுமையான நன்மனத்தைப் பன்மடங்கு கமழச் செய்து' நுகர்ந்தவர் உள்ளத்தையே கவருகிறது. அதுபோல் குறுக்கிடும் குட்டிச்சுவர்களை எல்லாம், கடினமாகக் கடந்த பின்னர், நம் உ.த.மு.க. உண்மையான உணர்வினை உலகத் தமிழ் மக்களும், மற்றும் உள்ள ஏனைய தலைவர்களும் அறியச் செய்வோம். அந்நாள் மிக அண்மையிலேயே தெரியவரும்:... தங்களின் வரவை மிக மிக ஆவலுடனும் ஆர்வத்துடனும் ஏப்பிரல் மாதத்தை நோக்கிக் காத்திருக்கிறோம்.

மீண்டும் சந்திக்கும் வரை, தங்கள் உள்ளத்திலும் உயிரிலும் என்றும் ஒன்றிவிட்டத் தங்கள் அன்பு நெஞ்சம்.

— எ பொற்செழியன். (தியோபில்) பிரான்சு

## உங்கள் வீரமுழக்கத்தால் போர்முரசு கொட்டும்!

அன்பும் பண்பும், அறிவும் ஆற்றலும், மதிநுண்மையும் நாவன்மையும் ஒருங்கே அமையப்பெற்ற எம் அன்புத் தந்தையாரே-பெரியாரே- திரு. பெருஞ்சித்திரனார் அவர்களே! அனைவருக்கும் எமது அன்பு வணக்கத்தையும் புத்தாண்டு வாழ்த்துகளையும் அன்புடன் படைக்கின்றோம்!

... உங்களைப்போன்ற வீரத்தமிழ்ப் பெரியார்களைக் கண்டு கதைக்கவும், அவர்களுடைய வீரத்தமிழ்ப் பேச்சுகளைக் கேட்கவும் மிகவும் ஆசைப்படுகின்றோம். கடைசியாக நீங்கள் (தமிழீழ முத்திரை வெளியீட்டு விழாவில்) பேசிய பேச்சினைப் பதிவு நாடாவில் பதிவுசெய்து பாரீசில் உள்ள அத்தனைத் தமிழ் இல்லங்களுக்கும், பரிமாறுதல் செய்து, உறங்கிக்கிடக்கும் கோழைத் தமிழரை விழிக்க வைக்கின்றோம்; உணர்ச்சியைத் தூண்டிவிடுகின்றோம். இப்படி அடிக்கடி தமிழ்ப் பெரியார்கள் வந்து, வீரப்பேச்சுகளை, தகரிகள் (பீரங்கிகள்) போன்று முழங்கிப்போனால், தமிழ் ஈழத்தில், போர் முரசு கொட்டியே தீரும். தமிழ் ஈழம் மலர்வதும் உறுதியே!

இங்ஙனம் — தங்கள் அன்புள்ள பிள்ளைகள்
ஞானம், அரசி, மற்றும் குழந்தைகள்.

## உணர்வை மீட்போம்!

—கடலூர். மணிமாறன், க.மு --

கொடுங்கோலர், கூறவொண்ணுக் கயமை மாந்தர்
குடிகேடர் சிங்களர்முன் தமிழினத்தார்
நடுநடுங்கிக் கிடப்பதுவோ? உரிமை சாக
நாவொடுங்கி இருப்பதுவோ? மொழியை நாட்டை
விடுவிக்க மறப்பதுவோ? இனத்தை மீட்கும்
வினைமறந்து துயில்வதுவோ? எண்ணிப் பாரீர்!
கொடு 'தலை'யை என்றாலும் கொடுப்போம்! ஈழக்
குடியரசை இனிதமைத்துக் குளிர்வோம் நெஞ்சம்!

அக்கால மறவாழ்வும் இற்றை நாளில்
அடிச்சுவடு தெரியாமல் மறைந்த தாமோ?
இக்காலத் தமிழரெலாம் அவைமறந்தே
இகழ் வுறவோ? இனம்மொழியை மறப்ப தாமோ?
'சுக்கன்று! மிளகன்று! கேட்டு வாங்க!
சுடரொளியாம் விடுதலையைப் பெறுவ தற்கே
தக்கதொரு நல்வாய்ப்பைப் பயன்படுத்தத்
தவறிவிட்டால் பின்னாளில் உமிழும் வையம்!

அமிழ்தனைய மொழிபேசும் தமிழன் நாடும்
அரும்புவதோ முதன்முதலில் ஈழம் தன்னில்!
தமிழன்குரல் பன்னாட்டுப் பொதுமன் றத்தில்
தவறாமல் ஒலிக்குமெனின் எட்டுக் கோடித்
மரது வாழ்வுக்கும் அரணுண் டாகும்
தனிமதிப்பு வந்தெய்தும் இழந்த சீர்த்தி
நிமிர்ந்துவரும் நெஞ்சத்தில் மகிழ்ச்சி தேங்கும்
நிலைபிறழாத் தன்மான வாழ்வு பொங்கும்!

பார்முழுதும் எதிர்த்திடினும் கவலோம், அஞ்சோம்!
பழிதுடைப்போம்! பகைமையினைத் தூள்தூளாக்க
மார் தட்டிச் சூளுரைப்போம்! மானம் காப்போம்
மாற்றாரைப் பணிந்தறியா உணர்வை மீட்போம்!
ஆர்ப்பாட்டம் தேவையில்லை; புலிகள் ஆவோம்!
ஆள்கின்ற உரிமையினை மீண்டும் எய்த
போர்ப்பரணி முழக்கிடுவோம்! புறநா னூற்றுப்
பொற்காலம் மறுபடியும் பூக்கக் காண்போம்!

## அழிதுயர் அகன்றிட அரும்புக பொங்கல்

வழி வழிப் பெருநிலைநினைந்திடும் நெஞ்சம்
பிழியமிழ் தெனும் தமிழ் நமதொரு சொந்தம்
மொழியினம் தலையெடுத் தெழுந்திடும் வண்ணம்
இழி நிலை தொலைத்திட இயங்கிடும் எண்ணம்
குழிபறி கயவரின் குறுமனக் கொட்டம்
பொழிமழை யெனுமுணர் வினிலொழி யட்டும்
கழி மகிழ்வென வரும் சுடரொளி யெங்கும்
அழி துயர் அகன்றிட அரும்புக பொங்கல்?

புலவர் கு. மாணிக்கம் க.மு.,கல்.சி
(மணிமொழியன்)
வேடசெந்தூர்

10.1.84
தி.ஆ. 2014சிலை-27)

## புத்தாண்டு வாழ்த்து

பேரன் புடையோய், பெரியோய், எங்கள்
பாவல ரேறே! வாழ்க!
கூர்மதி உடையோய்! தமிழினம் காக்கும்
கோவே! வாழ்க! வாழ்க!!
ஆரியத்தோடு பிறமொழிக் கலப்பை
அழித்திட வந்தோய்? வாழ்க!
சீரிய பண்போய்! திண்ணிய உளத்தோய்!
செந்தமிழ்ச் சான்றோய்! வாழ்க!

—பாவலர். சின்னப்பனார், கொம்மக்கோவில்.

## இந்தியாவில் உள்ள கல்விக்கூடங்கள்!

இந்தியாவில் 1981 சனவரி கணக்குப்படி உள்ள கல்விக் கூடங்கள் வருமாறு:

பல்கலைக் கழகங்கள் : 120.
கல்லூரிகள் : 4500.
உயர்நிலைப் பள்ளிகள் : 40,000.
தொடக்கப் பள்ளிகள் : 60,000.

## கல்வி உலகம் இயங்கியல்

ஆசிரியர் சங்கம் கூடும், மாதம் ஒருமுறை. அதில் வந்தவர், போனவர் பேசமுடியும், ஆனால், அவர் அரசு சார்புடையவராக இருத்தல் வேண்டும்! 'பசுவதை கூடாது' என்று பேசலாம். 'கடவுள் பற்று' கொள்ளும்படி பண்ணிப் பண்ணிப் பேசலாம்; பாடலாம். ஆனால், இவற்றிற்குப் பின்னணியாகவுள்ள 'மதப் பகைமை யுணர்ச்சி' களைத் தாக்கிப் பேசவோ, 'மூடநம்பிக்கையின்முடை நாற்றத்தை' வாரி வீசவோ கூடாதென்று கருதுகின்றனர். அடிப்படைக் கல்வி கற்பிக்கும் ஆசான்களுக்காக நடத்தப்படும்' சங்கத்தில் ஒரு தெளிவான பின்பற்றுதல் இல்லை. இவர்கள் கூடிப் பெறுகின்ற அறிவு, குழந்தைகளை உருவாக்குவதற்கு மாறாகச் சீரழிக்கவே செய்யும்!

ஆசிரியர்கள் அறிவியல்-வரலாறு ... எனப் பாடங்களை மனப்பாடமாகச் சொல்லித் தருவதை விட்டுவிட்டு, இலறுள்ள வாழ்க்கை முறையோடு ஒப்பிட்டுச் சொல்லித் தருதல் வேண்டும். நடைமுறையோடு இணையாத கல்விமுறை மக்களை உயர்த்தாது; உருப்படியாக்காது! இந்த உண்மையை ஆசிரியர்கள் புரிந்துகொள்ள, தங்கள் கண்ணோட்டத்தை மாற்றியமைத்துக் கொள்ளுதல் வேண்டும். — படிப்பாளி.

## அரசு வெளியிட்ட தமிழ் விளம்பரத்தில் பிழைகள் சாலை இளந்திரையன் கண்டனம்!

அன்புடையீர்,

தமிழில் பெயர்ப்பலகை எழுதுதல் என்னும் தலைப்பில், அரசின் பெயரால் வெளியிடப் பட்டுள்ள தமிழ் விளம்பரம் ஒன்றைத் 'தினமணி' 17-1-8' இதழில் பார்த்தேன். இந்த விளம்பரம் எழுத்துச் சீர்மையை வலியுறுத்துவதாகவும், வணிக நிறுவனங்கள், திரையரங்குகள், மனமகிழ் மன்றங்கள் உணவகங்கள், சிற்றுண்டிச் சாலைகள் முதலான) நல்ல தமிழ்ச் சொற்கள் நிரம்பியதாகவும் அமைந்திருப்பது மகிழ்ச்சிக்கு உரியது. ஆயினும் இந்த இருபது வரி விளம்பரத்தில் ஏழு சந்திப்பிழைகள் ஏற்பட்டுள்ளன; (ஐந்தாவது வரியில் ஒரு பிழை; பதின்மூன்றாம் வரியில் ஒரு பிழை; பதினெட்டாவது வரியில் நாலு பிழைகள்; பத்தொன்பதாம் வரியில் ஒரு பிழை) இது தவிர, மூன்றாவது பத்தியின் முதல் தொடர், தமிழ்ப் பெயரை...எழுதப்பட வேண்டும்'' என்று பிழையாக அமைக்கப்பட்டுள்ளது. இது, 'தமிழ்ப் பெயரை... எழுத வேண்டும்'' என்றோ ''தமிழ்ப் பெயர்... எழுதப்பட வேண்டும்'' என்றோ அமைந்திருக்க வேண்டும்.

தமிழில் பெயர்ப்பலகை எழுதுவது தொடர்பான அரசு விளம்பரத்தில் இத்தனைப் பிழைகள் ஏற்பட்டது வருந்தத்தக்கது. இனிமேலாவது, தமிழில் விளம்பரங்களை அமைக்கும் போது, அன்பு கூர்ந்து, ஓரளாவது தமிழ்ப் பயிற்சி உடையவர்களைக் கொண்டு அமைக்க ஏற்பாடு செய்யட்டும். அன்புள்ள,

முனைவர்.சாலை இளந்திரையன்

# எந்தமிழ் நல்லினம் நினைந்திடல் வேண்டும்!

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழினம் இல்லாத பெண்மை— இன்று தமிழக ஆளும் கட்சியில் புகுந்து அதனை அலைக்கழித்து வருகின்றதே. இங்குள்ள மிகவும் சாய்கால் வாய்ந்த உண்மைத் தமிழத் தலைவர்களை எல்லாம் தன் அழுகல் வாயால் நாற்றம் எடுக்க வைக்கிறதே. அதைக்கட்டுப்படுத்த முடியாமலோ அன்றி அதைக் கட்டவிழ்த்து விட்டோ இருக்கின்றதே ஆளும் கட்சித் தலைமை, அதனை என்னென்பது. தமிழீழத்தைப் பற்றி இவர்கட்கெல்லாம் என்ன தெரியும். அதன் கால் நூற்றாண்டிற்கும் மேலான போராட்டப் பாதை தெரியுமா? இன்று தமிழீழம் ஒன்றுதான் அங்குத் தமிழினம், தன் மானம், மதிப்பு, உரிமை எல்லாவற்றுடனும் வாழ ஒரே வழி என்பதும் தெரியுமா? இன்றுள்ள இளைஞர் எல்லாம் தன் மாந்த நலன்களை மறந்து காடு மேடுகளில் விலங்குகள் போல் வாழ்ந்து வருகின்றனரே அதி தன் இன. தாய், தமக்கை, தங்கையரின் மானம் காக்கத்தான் என்பதுவும் தெரியுமா? என்ன தெரியும்! மக்களோடு மக்களாய் வாழ்ந்து உண்டு உடுத்தி உறைந்தால் தானே தெரியும்! ஏட்டில் மட்டுமே படித்து எழுநிலை மாடங்களில் உறைந்து அறுசுவை உண்டியைப் பசியாமற் உண்டு பட்டிலும் வெல்வெட்டிலும் ஆன உடைகளை உடுத்திக் கொழுத்து வருவோர்க்கு எங்கே தெரியும்! தமிழினத்தைப் பற்றிய உண்மை ஒன்று இவர்கட்கு மிகத் தெளிவாகவே தெரியும். அதுதான் இந்த இனம் ஒற்றுமை இல்லாத இனம் என்பது. தங்களுக்குள் தாங்களே ஆயிரம் சாதிகளாகப் பிரிந்து கொண்டு அடித்துக் கொண்டு அழிகின்றனர் என்பது. ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்தானே. அந்தக் கூத்தாடிகள்தாம் இன்று கொம்மாளம் அடித்து வருகின்றனர். கற்பிற்கே இலக்கணம் வகுத்த இந்த நாட்டில் கற்பரசிகளையே தெய்வமெனத் தொழும் இந்த நாட்டில் யார் யாருக்கெல்லாமோ கூட்டம்! யார் யாருக்கெல்லாமோ சாய்கால்! யார் யாருக்கெல்லாமோ அரசியல் புகழ். எல்லாம் எதனால்? இந்தத் தமிழர்கள் இளித்தவாயர்கள் என்பதினாற்றானே, மார்வாடிகள் என்பவன்கள் பணத்தைச் சுரண்டி வாழ்கின்றான்கள். ஆடத்தெரியாதவன்களும் பாடத்தெரியாதவன்களும் திரையில் தோன்றி கீழ்த்தரமான இரட்டைப் பேச்சுகளால் இளைஞர் முதல் முதியவர் வரை அறிவை மயக்கிச் சுரண்டுகின்றான்கள்! வந்தேறிகள்தாமே இங்கு எல்லாம். அவர்கள் வாயில் வந்ததெல்லாம் சட்டம். நினைத்ததெல்லாம் நடைமுறை. இனியாவது இந்தத் தமிழினம் தன்னைத் தானே உணர்ந்து கொண்டு ஒற்றுமையுடன் வாழ்ந்து உலுத்தர்களைப் புறந்தள்ளி நடைபோடுமா? பொறுத்திருந்து பார்ப்போம்.

— ஆய். அண்டிரன்.

---

உ.த.மு.க. செய்தி!

பெரியார் மாவட்ட உ.த.மு.க. நடத்தும்
'பாவாணர் படிப்பகம்' கொண்டாடிய

## தமிழர் திருநாள் விழா

கடந்த 15-1-84 ஞாயிறு, காலை 9 மணியளவில் ஈரோடு, சென்னிமலை சாலையிலுள்ள, உ. த. மு. க. நடத்தும் பாவாணர் படிப்பகத்தில், தமிழர் திருநாளாகிய, பொங்கல்விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. மன்றத்தலைவர் க. சொல்லின் செல்வன் (சம்பத்) தலைமை தாங்கினார். மன்றப் பொருளர் மு. தமிழ்க்கனல் (கணேசன்) வரவேற்புரையாற்றினார். 'புதுச்சுடர்' ஆசிரியர் திரு. மு. இந்திரகேசவன், 'தமிழரும் பொங்கலும்' என்னுந்தலைப்பில் சிறப்புரையாற்றினார். திருவாளர்கள், அ. அழகண்ணல் (பாவேந்தர் அ. இராமலிங்கம், பெரியார் மாவட்டச் செயலர் உ. த. மு. க.) பாவலர் கோவலன், பாவலர் தமிழ்க்குமரன், சிலம்பு அரசமாணிக்கம், ஆவத்தி வெங்கடாசலம் ஆகியோர் பல்வேறு தலைப்புகளில் உரையாற்றினார்கள். வந்திருந்த அனைவர்க்கும் திரு அழகண்ணல் பொங்கல் வழங்கினார். விழா இறுதியில் கோவை சி. அழகன் (ராமு) (பாவாணர் மன்ற உதவிச் செயலர்) நன்றியுரை கூறினார்.




"அண்ணா !"

"என்ன தம்பி ?"

'மும்மொழித்திட்டம் என்பது தமிழ்நாட்டுக் குழந்தைகள் எல்லோரும், தமிழுடன் இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளையும் கட்டாயமாகப் படிக்க வேண்டும் என்பதுதானே ?"

"ஆமாம்,"

"தமிழ்நாட்டுக் குழந்தைகள் எல்லோரும் இந்தியைப் படிக்கவேண்டும் என்று செல்வது இந்தித் திணிப்புதானே?"

"ஆமாம்,"

"அப்படியிருக்க, சட்டமன்ற மேலவையில் பேசிய பேராயக் கட்சி உறுப்பினர்கள், 'மும்மொழித் திட்டத்திற்கு ஆதரவு-இந்தித் திணிப்புக்கு எதிர்ப்பு' என்பதுதான் தங்கள் கொள்கை என்று சொல்லியிருக்கிறார்களே! அவர்களுடைய அந்தப் பேச்சு தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்கிற பேச்சா? அல்லது தமிழ்மக்களை ஏமாற்றுகிற பேச்சா?"

"எனக்குத் தெரியாது தம்பி !"

— தமிழவேள்.

---

## பர்மாவிலிருந்து ஒரு மடல்!

அன்பார்ந்த அறிவின் சிகரம்!

சொல்லின் செல்வர் ஐயா பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களுக்கு வணக்கம்.

இவண்வாழ் தமிழ் அன்பர்கள் 'தமிழ்நிலம்'— 'தென்மொழி' இதழ்களைப் படித்துப் பேருவவகையடைகிறார்கள். இனம்-மொழி-நாடு-என்னும் இம் மூன்றுக்கும் தாங்கள் ஆற்றிவரும் தொண்டுகளைக் கண்டு வியக்கிறார்கள். கடல் கடந்து கடாரத்தில் வாழும் நாங்கள் நம் தமிழின(கலாச்சாரம்)பண்பாடு இவற்றில் சிறந்து விளங்குவதற்குத் தாங்கள் அனுப்பிவைக்கும் 'தென்மொழி' 'தமிழ்நிலம்' பேருதவியாக இருக்கின்றது. 'உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்' வளர்ச்சியடைய, முன்னேற்றமடைய, உலகத் தமிழர்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும், ஒருமுகப்பட்டு எல்லோரும் செயலில் ஈடுபட வேண்டும் என உலகத் தமிழர்களை அன்போடு வேண்டுகிறேன்.

பாவலரேறு ஐயா அவர்களின் மேற்கத்திய சுற்றுலாச்செலவு வெற்றியொடு அமைந்ததிற்கு என்னுடைய நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்களன்புள்ள
தென்மொழி அன்பன் சா. மதியழகன்
இரங்கூன் (பர்மா)

---

### இளம் எழுத்தாளர்களுக்கு இனிய வாய்ப்பு

ஊற்றங்கரை தமிழ்ச்சங்கம் தொகுக்கவிருக்கும் தமிழீழம் எனும் தொகுப்பு நூலுக்கு பாடல்கள் வரவேற்கப்படுகின்றன. கீழ்க்காணும் முகவரிக்கு 15-2-84-ஆம் நாளுக்குள் அனுப்பிவைக்கவும்.

முகவரி :
செயலர் / வெளியீடுகள் ஊற்றங்கரை தமிழ்ச்சங்கம்
ஊற்றங்கரை—633 207

---

### கருப்புப் பணம் யாரிடம் புழங்குகிறது?

இந்தியப் பாராளுமன்றத்திற்கு வேட்பாளராக நிற்பவர்தேர்தல் செலவுக்காகச் சட்டப்படி உருபா 35 ஆயிரந்தான் செலவு செய்யவேண்டும். ஆனால், இங்குள்ள வேட்பாளர் ஒவ்வொருவரும் உருபா ஐந்து இலக்கம் வரை செலவு செய்வதாகவும் இதனால், உருபா 170 கோடிக்குமேல் கருப்புப் பணம் வெளிவருவதாகவும் ஒரு கணக்கெடுப்பு கூறுகிறது.

---

## தமிழ் பயிலும் சீன மாணவர்

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் நாலந்தா பல்கலைக் கழகத்தில் சீனாவிலிருந்து வந்த கியூன்சாங் (Hiuen-Tsang) தங்கி ஒகக்கலை முதலியவற்றைக் கற்றதாக வரலாறு எடுத்துரைக்கிறது. இன்று தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்குச் சீனாவிலிருந்து வாங் பாவ் சீ (Wang Bao Shi) என்பார் தம் தமிழறிவைப் பெருக்கிக்கொள்ள வந்துள்ளார்.

நான்காண்டுகள் பீகிங்கில் தமிழில் பேசவும், படிக்கவும், எழுதவும் கற்றுக்கொண்ட வாங் பாவ்சீ இப்போது தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் பேச்சுத் தமிழைக் கற்றுவருகிறார். தமிழ், உலகிலுள்ள பழம்பெரும் மொழிகளில் ஒன்றாக இருந்தபோதிலும் தமிழ் அண்மைக்காலத்தில்தான் சீனாவில் பரவத் தொடங்கியுள்ளது என, திரு.வாங் சீ குறிப்பிட்டார். 1950-ஆம் ஆண்டில் சீன அரசு இரு மாணவர்களைத் தமிழ்மொழி கற்க அனுப்பியது. 1960-ஆம் ஆண்டிற்குப் பின்னர்தான் சீனாவில் தமிழ்மொழி பரவத் தொடங்கியது.

சீனாவின் உயர்கல்வி நிறுவனங்களில் ஒன்றான பீகிங் ஒலிபரப்புக் கல்லூரி, தமிழ் கற்பிக்க இரு ஆசிரியர்களை வரவழைத்தது. அவர்களிடம் இருபது மாணவர்கள் தமிழ் கற்றனர். நான்காண்டுகள் தமிழ் படித்தபின் அவர்கள் அரசுத்துறைகளுக்கு அனுப்பப்பட்டனர். அவர்களில் பத்துப்பேர் பீகிங் வானொலியின் தமிழ்த்துறையில் பணியமர்த்தப்பட்டனர். பீகிங் வானொலி 1-8-1963-இல் தமிழ் ஒலிபரப்பைத் தொடங்கியது. 1964-இல் பீகிங் வானொலி ஒரு தமிழ் வகுப்பைத் தொடங்கியது. பீகிங் அரசு 1966 முதல் 1983 வரையுள்ள காலத்தில் பத்து மாணவர்களைத் தமிழ் கற்பதற்காக இலங்கை அனுப்பியது. 1967-ஆம் ஆண்டில் சீனாவில் அயல்நாட்டு மொழி வெளியீட்டுத்துறை தமிழில் நூல்களை வெளிடத்தொடங்கியது. 1978-இல் சீன குமுக அறிவியல் கழகம் அமைக்கப்பட்டது. இவ்வமைப்பு தெற்காசிய நாடுகளின் குமுகம்,பண்பாடு வரலாறு முதலியவற்றைப்பற்றி ஆய்வு நடத்துகின்றது.

1980-ஆம் ஆணடில் பழைய, இலக்கியங்கள் பற்றி ஆய்வு நடத்தது. தமிழ் இலக்கிய ஆய்வு வாரியம் அமைக்கப்பட்டது. சீனக் கலைக் களஞ்சியத்திற்காகச் சிலம்பு, திருக்குறள், இராமாயணம் முதலியவை பற்றிச், சீன ஆய்வாளர்கள் எழுதியுள்ளனர்.

'நான் தாயகம் திரும்பியவுடன் பீகிங் வானொலிக்குக் கட்டுரை எழுதுவதுடன், தமிழ்நாடு, இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து வரும் தமிழ் அறிஞர்களின் 'நேர்காணல்' நிகழ்ச்சிகளை நடத்துவேன். மேலும் நான் சிறுகதைகளைத் தமிழிலிருந்து சீன மொழியில் மொழிபெயர்க்கப் போவதால் பேச்சுத் தமிழை ஊக்கமாகக் கற்கிறேன்'— என திரு வாங் பாவ் சீ கூறினார். திரு. வாங் பாவ் சீ ஆங்கிலத்தைவிட, தமிழில் நன்கு உரையாடுகிறார்.

நன்றி: செய்தி மலர். தமிழ்ப்பல்கலைக் கழகம்.

---

பாளையங்கோட்டை- உ.த.மு.க.
தொடக்கவிழாவில் பாவலரேறு ஐயா
அவர்களின் 'ஐயை' வில்லிசை அரங்கேற்றம்

நாள் : தி.பி. 2015, சுறவம் 25 (8-2-1984)
அறிவன் கிழமை,
இடம் : சவகர் திடல், பாளையங்கோட்டை
வழங்குவோர்: தச்சநல்லூர் திருவாட்டி. திரவியத் தம்மாள் செந்தமிழ் வில்லிசைக் குழுவினர்
வில்லிசை வடிவம்: மா. அனந்தையா
முன்னிலை: பாவலரேறு பெருஞ்சித்திரனார்
ஏற்பாடு: இராவணன்.

---

ஒவ்வொரு வெள்ளிக்கிழமைதோறும் வெளிவரும். பதிவு எண்: TN/MS/C)/657

உ.த.மு.க.வின் உயர்ந்தகொள்கைகள் :

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
  எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

அனுப்புதல்:
தமிழ் நிலம்
5. அருணாசலத் தெரு.
திருவல்லிக்கேணி,
சென்னை—5

பெறுநர்.
திரு/திருவாட்டி

நூல்-அஞ்சல்

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

கழக அருளாளர் : தென்மொழி நா. இளமாறன்
கழக அருட்கொடையாளர்கள்.
தென்மொழி ந.முத்துக்குமரன், பல்லடம் மா.ஆறுமுகம்.

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.